## வகுப்பு - 7 - பருவம் - 3 - வரலாறு
## 2 தமிழ்நாட்டில் கலையும் கட்டடக் கலையும்

**பயிற்சி வினாக்கள்:**

1. யாருடைய காலத்தில் கோவில் கட்டிடக் கலை குடைவரைக் கோவில்கள் நிலையிலிருந்து கட்டுமானக் கோவில்களாக மாற்றத்திற்கு உள்ளானது?

   1. பல்லவர்கள் காலம்
   2. நாயக்கர்கள் காலம்
   3. சோழர்கள் காலம்
   4. பாண்டியர்கள் காலம்

2. குடைவரைக் கட்டிடக் கலைக்கு முன்னோடியாகத் திகழ்ந்த பல்லவ அரசர்

   1. இரண்டாம் நரசிம்மவர்மன்
   2. மகேந்திரவர்மன்
   3. இரண்டாம் நந்திவர்மன்
   4. ராஜசிம்மன்

3. மகேந்திரவர்மன் உருவாக்கிய முதல் குடைவரைக் கோவில் உள்ள இடம்

   1. மலையடிக்குறிச்சி
   2. ஆனைமலை
   3. மண்டகப்பட்டு
   4. திருச்சிராப்பள்ளி

4. குடைவரைக் கோவிலின் முன்புறம் அமைந்துள்ள எத்தனை தூண்கள் கோவிலைத் தாங்கி நிற்கும்?

   1. ஏழு
   2. ஐந்து
   3. நான்கு
   4. இரண்டு

5. கோவிலில் துவாரபாலகர்களின் இருப்பிடம் எது?

   1. கருவறை
   2. கருவறை வாயில்
   3. விமானம்
   4. சுற்றுச்சுவர்

6. கீழ்கண்டவற்றைப் பொருத்துக.

   i. கி.பி.600 - 850 - a) பிற்காலச் சோழர்கள்

   ii. கி.பி.850 - 1100 - b) விஜயநகர காலம்

   iii. கி.பி.1100 - 1350 - c) பல்லவர் காலம்

LIVEWORKSHEETS

iv. கி.பி.1350 - 1600 - d). முற்காலச் சோழர்கள்

1. i - a ii - b iii - c iv - d
2. i - b ii - a iii - d iv - c
3. i - c ii - d iii - a iv - b
4. i - d ii - c iii - b iv - a

7. குடைவரைக் கோவில்கள் அமைக்கும் முறை மறைந்து, பெரிய வடிவ கட்டுமானக் கோவில்கள் கட்டப்பட்ட காலக்கட்டம்?

1. கி.பி.500
2. கி.பி.600
3. கி.பி.650
4. கி.பி.700

8. ஏழு கோவில்கள் என அழைக்கப்படும் கோவில் எது?

1. மகாபலிபுரம் - கடற்கரைக் கோவில்
2. காஞ்சிபுரம் - வைகுண்டப் பெருமாள் கோவில்
3. தஞ்சாவூர் - பெரிய கோவில்
4. தாராசுரம் - ஐராவதீஸ்வரர் கோவில்

9. மகாபலிபுரம் கடற்கரைக் கோவிலைக் (ஏழு கோவில்கள்) கட்டியவர் யார்?

1. இராஜேந்திர சோழன்
2. இராஜராஜ சோழன்
3. மகேந்திரவர்மன்
4. இரண்டாம் நரசிம்மவர்மன்

10. தென்னிந்தியாவின் மிகப் பழமையான கட்டுமானக் கோவில் ________ ஆகும்.

1. வெட்டுவான் கோவில்
2. ஏழு கோவில்கள்
3. கழுகுமலைக் கோவில்
4. மண்டகப்பட்டு கோவில்

11. காஞ்சி கைலாசநாதர் கோவிலைக் கட்டியவர் யார்?

1. ராஜசிம்மன்
2. விஜயாலய சோழன்
3. செம்பியன் மகாதேவி
4. இரண்டாம் இராஜராஜன்

12. இரண்டாம் நந்திவர்மன் ________ கோவிலைக் கட்டினார்?

1. திருப்புறம்பியம் கோவில்
2. ஐராவதீஸ்வரர் கோவில்

LIVEWORKSHEETS

3. காஞ்சி - வைகுண்ட பெருமாள் கோவில்

4. காஞ்சி - கைலாசநாதர் கோவில்

13. ________ ஆம் ஆண்டு கடற்கரைக் கோவில் வளாகம் உட்பட மாமல்லபுரம் மொத்தமாக யுனெஸ்கோவால் (UNESCO) உலக பாரம்பரிய இடமாக அங்கீகரிக்கப்பட்டது.

1. 1980 2. 1984 3. 1999 4. 1985

14. பாண்டியப் பேரரசின் ஆட்சிக்குட்பட்டிருந்த பகுதிகளில் ________ க்கும் மேற்பட்ட குகைக்கோவில்கள் கண்டறியப்பட்டுள்ளன.

1. 50 2. 100 3. 25 4. 70

15. கீழ்க்கண்டவற்றுள் எது பாண்டியப் பேரரசின் ஆட்சிக்குட்பட்டிருந்த பகுதியைச் சேர்ந்த குகைக் கோவில்கள் இல்லை.

1. மலையடிக்குறிச்சி 2. ஆனைமலை

3. திருப்பரங்குன்றம் 4. திருப்புறம்பியம்

16. ஒற்றைக்கல்லில் செதுக்கப்பட்ட கோவிலுக்கு எடுத்துக்காட்டு ________.

1. நெல்லையப்பர் கோவில் 2. தஞ்சாவூர் கோவில்

3. கழுகுமலை வெட்டுவான் கோவில் 4. திருமலைபுரம் கோவில்

17. வேறுபட்ட ஒன்றைத் தேர்ந்தெடு.

1. திருப்பரங்குன்றம் 2. கழுகுமலை

3. ஆனைமலை 4. தஞ்சாவூர் பெரிய கோவில்

18. சித்தன்னவாசல் ஓவியங்கள் ________ ஓவியங்களுடன் சில ஒப்புமைகளைப் பெற்றுள்ளன.

1. அஜந்தா 2. திருமலைபுரம்

3. பிள்ளையார்பட்டி 4. திருவில்லிபுத்தூர்

LIVEWORKSHEETS

19. தாதாபுரம் கோவில் யாருடைய கோவில் கட்டிடக் கலைக்கு எடுத்துக்காட்டு

1. முற்காலப் பாண்டியர்கள்
2. முற்காலச் சோழர்கள்
3. பல்லவர்கள்
4. நாயக்கர்கள்

20. கீழ்க்கண்டவற்றைப் பொருத்துக.

i. தேவகோஷ்டங்கள் - a) இந்திரனின் யானை வழிபட்டது

ii. துவாரபாலகர்கள் - b) தஞ்சாவூர் சிகரம்

iii. ஐராவதீஸ்வரர் - c) மாடக்குழிகள்

iv. தட்சிண மேரு - d) வாயிற்காப்போர்

1. i - a ii - b iii - c iv - d
2. i - b, ii - a iii - d iv - c
3. i - d ii - c iii - b iv - a
4. i - c, ii - d iii - a iv - b

21. தஞ்சாவூர் சிவன் கோவில் கட்டிமுடிக்கப்பட்ட ஆண்டு ________

1. கி.பி.1010
2. கி.பி.1050
3. கி.பி.1009
4. கி.பி.1100

22. முற்காலச் சோழர்களின் கோவில் கட்டிடக்கலை ________ பாணியைப் பின்பற்றி அமைந்தது.

1. செம்பியன் மகாதேவி
2. இராஜராஜ சோழன்
3. இராஜேந்திர சோழன்
4. விஜயாலய சோழன்

23. தஞ்சாவூர் பெரிய கோவில் விமானத்தின் உயரம் ________ ஆகும்.

1. 55 மீட்டர்
2. 116 அடிகள்
3. 216 அடிகள்
4. 100 மீட்டர்

24. சோழ அரசன் இரண்டாம் ராஜராஜன் கட்டிய கோவில் ________ ல் உள்ளது.

1. தஞ்சாவூர்
2. தாராசுரம்
3. கங்கை கொண்ட சோழபுரம்
4. ஆழ்வார் திருநகரி

25. பிற்காலப் பாண்டியர்களின் பிள்ளையார்பட்டி குடைவரைக் கோவில் ________ ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

LIVEWORKSHEETS

1. 16 2. 15 3. 14 4. 13

26. கீழ்க்கண்டவற்றைப் பொருத்துக.

i. காஞ்சிபுரம் - a) ஆதிநாதர் கோவில்

ii. வேலூர் - b) ரங்கநாதர் கோவில்

iii. திருவரங்கம் - c) வரதராஜ பெருமாள் கோவில்

iv. ஆழ்வார் திருநகரி - d) ஜலகண்டேஸ்வரர் கோவில்

1. i - c, ii - d, iii - b, iv - a
2. i - a, ii - b, iii - c, iv - d
3. i - d, ii - a, iii - b, iv - c
4. i - d, ii - c, iii - b, iv - a

27. கீழ்க்கண்ட எந்த ஊர்களிலுள்ள கோவிலில் விஜயநகர, நாயக்கர் கால ஓவியங்கள் இடம்பெறவில்லை?

1. திருவண்ணாமலை
2. திருவெள்ளரை
3. திருவில்லிபுத்தூர்
4. தாராசுரம்

28. உலகிலேயே மிகவும் நீளமான கோவில் பிரகாரங்கள் இங்கே அமைந்துள்ளது.

1. இராமேஸ்வரம் - இராமநாத சுவாமி கோவில்
2. மதுரை மீனாட்சியம்மன் கோவில்
3. தஞ்சை பெரிய கோவில்
4. திருநெல்வேலி - நெல்லையப்பர் கோவில்

29. தவறான கூற்றினைத் தேர்வு செய்க.

கூற்று (A): திராவிட கட்டிடக்கலை நம்மண்ணில் பிறந்ததாகும்.

கூற்று (B): தமிழ் திராவிட கட்டிடக் கலையின் மரபிற்கு மகாபலிபுரத்திலுள்ள குடைவரைக் கோவில்களே எடுத்துக்காட்டுகளாகும்.

கூற்று (C): தமிழ்நாட்டில் கோவில் கட்டிடக் கலையின் பரிணாம வளர்ச்சி ஏழு கட்டங்களாக நடைபெற்றுள்ளது.

1. கூற்று (A) மட்டும் தவறு
2. கூற்று (A), (B) மட்டும் தவறு
3. கூற்று (C) மட்டும் தவறு
4. கூற்று (A), (B), (C) மூன்றும் தவறு

LIVEWORKSHEETS

30. தவறான கூற்றினைத் தேர்வு செய்க.

கூற்று (A): பல்லவர் காலத்தில் கோவில் கட்டிடக் கலை குடைவரைக் கோவில்கள் எனும் நிலையிலிருந்து கட்டுமானக் கோவில்கள் எனும் மாற்றத்திற்கு உள்ளானது.

கூற்று (B): அர்ச்சுனன் தவமிருக்கும் காட்சி கொண்ட கருங்கல் பாறை ஏறத்தாழ 100 அடி உயரமும் 45 அடி நீளமும் கொண்டது.

கூற்று (C): முற்காலப் பாண்டியர்கள் பல்லவர்களின் சமகாலத்தவர்கள் ஆவர்.

1. கூற்று (A) மட்டும் தவறு
2. கூற்று (B) மட்டும் தவறு
3. கூற்று (A), (B), (C) மூன்றும் தவறு
4. கூற்று (B), (C) மட்டும் தவறு

31. சரியான கூற்றினைத் தேர்வு செய்க.

கூற்று (A): பாண்டியர் காலத்து சிவன் கோவில்களின் லிங்கங்கள் மற்றும் நந்தியின் உருவங்கள் தாய்பாறையிலிருந்து செதுக்கப்பட்டதாகும்.

கூற்று (B): பாறை குடைவரைக் கோவில்களும் கட்டுமானக் கோவில்களும் பாண்டியர் கட்டிடக் கலையின் சிறப்புமிக்க அம்சங்களாகும்.

கூற்று (C): கழுகுமலை வெட்டுவான் கோவிலின் உச்சியில் உமா மகேஸ்வரர், தட்சிணாமூர்த்தி, விஷ்ணு, பிரம்மா ஆகியோர் சிற்பங்கள் உள்ளன.

1. கூற்று (A), (B), (C) மூன்றும் சரியானது
2. கூற்று (A) மட்டும் சரியானது
3. கூற்று (B) மட்டும் சரியானது
4. கூற்று (C) மட்டும் சரியானது

32. சரியான கூற்றினைத் தேர்வு செய்க.

கூற்று (A): முற்காலப் பாண்டியர்களின் ஓவியங்கள் சித்தன்னவாசல் மற்றும் திருமலைபுரத்தில் உள்ளன.

கூற்று (B): சித்தன்னவாசல் சமணத்துறவிகள் வாழ்ந்த குகைகள் இல்லை.

கூற்று (C): சித்தன்னவாசல் குகை ஓவியங்களில் எஞ்சியவற்றுள் தாமரைத் தடாக ஓவியம் புகழ்பெற்றது ஆகும்.

1. கூற்று (A) மட்டும் சரியானது
2. கூற்று (B) மட்டும் சரியானது
3. கூற்று (A), (B), (C) சரியானது
4. கூற்று (A), (C) மட்டும் சரி

LIVEWORKSHEETS

33. சரியான இணையைத் தேர்ந்தெடு.

1. பிற்காலச் சோழர்கள் - தாராசுரம்

2. காஞ்சிபுரம் - ஜலகண்டேஸ்வரர் கோவில்

3. மதுரை - ஆதிநாதர் கோவில்

4. திருநெல்வேலி - வரதராஜ பெருமாள் கோவில்

1. 3, 4 2. 1, 2 3. 1 4. 2, 4

34. தவறான இணையைத் தேர்ந்தெடு.

1. பாறைகளில் சிற்பங்கள் - பல்லவர்கள்

2. விமானம் - முற்காலச் சோழர்கள்

3. மண்டபம் - பிற்காலச் சோழர்கள்

4. பிரகாரங்கள் - நவீன காலம்

1. 1 மட்டும் தவறானது 2. 2, 3 இரண்டும் தவறானது

3. 3, 4 இரண்டும் தவறானது 4. 3 மட்டும் தவறானது

35. கூற்று காரணத்தை ஆய்வு செய்க.

கூற்று : தஞ்சை பெரிய கோவிலின் சிகரம் தட்சிணமேரு என்றழைக்கப்படுகிறது.

காரணம்: தஞ்சை பெரிய கோவில் விமானம் 216 அடிகள் உயரம் கொண்டது. (உலகில் மனிதனால் கட்டப்பட்ட உயரமான சிகரங்களில் ஒன்று)

1. கூற்று சரி ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

2. கூற்று காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

3. கூற்று சரி காரணம் தவறு

4. கூற்று காரணம் இரண்டும் தவறு.

LIVEWORKSHEETS